ஆய்வு செய்து, அந்த வழித்தடங்களிலே பயணிகளினுடைய அடர்வுக்கேற்ப, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று, பேருந்துகளை இயக்குவதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 230, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

230—

நாட்டுப்புறக் கலைகள்

***35023—டாக்டர் V.P.B. பரமசிவம்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து மாவட்ட மற்றும் ஒன்றியத் தலைமையிடங்களில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நாட்டுப்புறக் கலைகளுக்கான ஊக்குவிப்பு போட்டிகள் நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்கிறேன். இந்த வருடம் 'மண்ணின் கலை விழா' என்ற பெயரில் 32 மாவட்டங்களிலும் ரூ.64 இலட்சத்துக்கு நாட்டுப்புறக் கலைகளுக்கான கலை விழா நடத்துவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. வெளிநாடுகளுக்குச் செல்லும் கலைஞர்களுக்கு இந்த வருடம் நாம் வழங்குகின்ற பணம் ஒரு கோடி ரூபாயிலிருந்து மூன்று கோடி ரூபாயாக உயர்த்தி அறிவிக்கப்பட்டிருக்கிறது. மற்றபடி ஒன்றிய அளவில் நடத்துவதற்கு கருத்துரு ஏதும் அரசின்பால் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள்.*

2018 ஜூன் 27]

டாக்டர் V.P.B. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிந்த நாடகக் கலைஞர்களுக்கும், நாட்டுப்புறக் கலைஞர்களுக்கும் ஓய்வூதியத்தினை உயர்த்தி வழங்கியிருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் நடக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், நாட்டுபுறக் கலைஞர்களின் சார்பாக நன்றியினை உரித்தாக்குகிறேன். இந்தக் கலை விழா மாவட்டந்தோறும் நடைபெறும் என்று சொன்னதற்கு அவருக்கு மீண்டும் ஒருமுறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

சங்க இலக்கியங்களுக்கு இணையாக, பிறந்ததிலிருந்து இறப்பு வரை ஒவ்வொரு நிகழ்விற்கும், நம்முடைய பாட்டிகளிடம் கிராமியப் பாடல்கள் இருக்கின்றன. அந்தப் பாடல்களையெல்லாம் விரைவாக நாம் ஆவணப்படுத்த வேண்டும். ஏனென்றால், இன்றைக்கு ஒரு செந்தில்-ராஜலட்சுமி விஜய் டி.வி.யில் வந்து கிராமியப் பாடல்களைப் பாடுவதைப் பார்த்து, நாம் அத்தனைபேரும் சந்தோஷப்படுகிறோம். பல செந்தில்-ராஜலட்சுமிகள் பாட்டிகள் உருவத்தில் இருக்கின்றனர். அந்தக் கிராமியப் பாடல்களை நாம் ஆவணப்படுத்த வேண்டும். ஏனென்றால், அந்த மக்களிசைப் பாடல்கள் ஒரு கலை பொக்கிஷம். ஏற்கெனவே தமிழக அரசு 30 கலைகளை, பல்வேறு கிராமிய நாட்டுப்புறக் கலைகளை ஆவணப்படுத்திக் கொண்டிருக்கிறது. அவற்றில், இந்தப் பாட்டிகளினுடைய கிராமிய மக்களிசைப் பாடல் வரிகளை ஆவணப்படுத்த இந்த அரசு முன்வருமா என்று கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டுப்புறப் பாடல்களை ஆவணப்படுத்தும் பணி தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் ஏற்கெனவே எடுத்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.* Intangible Heritage *என்ற பெயரில்* UNESCO-*விலிருந்து நாம்* fund *எடுத்து இந்தத் திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதைத்தவிர, உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோன்று, நாட்டுப்புறக் கலைக் குழுக்களுக்கு ஆதரவு தரும் மிக முக்கியமான பணி இன்றைக்கு இணையதளம் மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது;* tamilvu.org *என்ற*

பெயரில் இன்றைக்கு I.T. துறையோடு இணைந்து, பண்பாட்டு மென்நுழைவாயில், cultural portal ஒன்று உருவாக்கப்பட்டு, இந்த வருடம் முடிவடைவதற்கு முன்னால், ஒரு இலட்சம் உறுப்பினர்களுடன் குறைந்தது 10,000 குழுக்களை அதில் register செய்வதற்கு நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம். இதன் மூலமாக அவர்களுக்கு எல்லா இடங்களிலிருந்தும் உதவிகள் கிடைப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. இயல், இசை, நாடக மன்றம் மூலமாகவும், இசை மற்றும் கவின்கலை பல்கலைக்கழகம் மூலமாகவும் இந்தப் பணியானது ஆவணப்படுத்துவது மட்டுமல்லாமல், அடையாளப்படுத்துவது, அவர்களுக்கு வெளிச்சம் போட்டுத் தருவது, உலகத்திலுள்ள எல்லா இடங்களிலிருந்தும் தமிழர்கள், அவர்களுக்கு நேரடியாக Programme fix செய்கிற வசதிகளுடன் இருக்கும். எல்லாவற்றிற்கும்மேல் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சமீபத்தில் சேலத்தில் தொடங்கி வைத்த திட்டம்; ஒவ்வொரு கலைஞருக்கும், அவர்களுக்கு இசைக் கருவிகள், ஆடை ஆபரணங்கள் அளிப்பதற்காக நபர் ஒருவருக்கு 10,000 ரூபாய் வீதம், 320 பேருக்கு இந்த வருடம் தரப் போகிறோம். ஒரு மாவட்டத்திற்கு 10 பேர் என்ற வகையில், வெளிப்படையாக அந்தக் கலைஞர்களைத் தேர்ந்தெடுக்கும் பணி இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தில், 33,500 பேர் என்று இப்போது இருக்கிற உறுப்பினர்களை ஒரு இலட்சத்துக்குமேல் கொண்டு வந்து சேர்ப்பதற்காக அந்த செயல்முறைகளை எளிமைப்படுத்தி, இந்த வருடம் முடிவடைவதற்குள் ஒரு இலட்சம் கலைஞர்கள் வாழ்வில் ஒளியேற்றுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசாங்கம் உறுதிபூண்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள்.

டாக்டர் V.P.B. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு, நம்முடைய தமிழகத்தில் நாடகம் பார்ப்பவர்களுடைய எண்ணிக்கை குறைந்திருக்கிறது. நீங்கள் T.V. சீரியலை நினைக்க வேண்டாம். கிராமத்தில் விடிய, விடிய நடைபெறுகின்ற நாடகம். அந்த நாடகக் கலைஞர்களுடைய நாடகங்களை விழாக்களிலே எடுத்து நடத்துவதற்குப் பதிலாக, இன்றைக்கு ஆடலும், பாடலும் என்று

2018 ஜூன் 27]

வேறொரு திசைநோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இந்நிலையில் இன்றைக்கு சென்னை போன்ற பெருநகரங்களில் Theatre Artiste *என்று சொல்லக்கூடிய இளைஞர்கள், இளம் பெண்கள் சமூக அக்கறை வாய்ந்த நாடகங்களை பல்வேறு* Cultural Academy-*களில் நடத்திக் கொண்டிருக்கின்றனர். அவர்களையும், இந்த முதிர்ந்த, திறமைவாய்ந்த நம்முடைய கிராமத்து நாடகக் கலைஞர்களையும் ஒன்றிணைத்து ஒரு நாடகப் பயிற்சிப் பள்ளியினை 2 அல்லது 3 மண்டலங்களிலே தொடங்கி, இந்தக் கலையை அழியாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.*

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

டாக்டர் V.P.B. பரமசிவம்: *அதோடுமட்டுமல்லாமல், அரசுப் பள்ளிகளுக்கு நான் செல்கின்றபோது, ஒரு வித்தியாசமான நிகழ்வினைப் பார்த்தேன். எங்களையெல்லாம் வரவேற்றபொழுது குழந்தைகள் தப்பாட்டம், தேவராட்டம் ஆடி சிறப்பு விருந்தினர்களை மேடைக்கு அழைத்துச் சென்ற ஒரு நல்ல நிகழ்வை நான் அரசுப் பள்ளியிலே பார்த்தேன். ஆகவே, அரசுப் பள்ளிகளில், கலை மற்றும் கைவினை வகுப்புகளில் நாட்டுப்புறக் கலைகளைக் கற்றுக்கொடுப்பதற்கான வாய்ப்பு இருக்கிறதா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, ஒவ்வொரு பள்ளியிலும், ஒவ்வொரு கல்லூரியிலும்* Heritage and Cultural Club *என்ற பண்பாட்டுச் சங்கத்தை அமைத்து, இந்தக் கலைகளைக் கண்டிப்பாக நாம் கொண்டுபோய் சேர்ப்போம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த, தப்பாட்டம்,கரகாட்டம்,வில்லுப்பாட்டு,தெருக்கூத்து,மயிலாட்டம், ஒயிலாட்டம், சிலம்பாட்டம், பொம்மலாட்டம், நையாண்டி மேளம், பொய்க்கால் குதிரை ஆட்டம், காவடி ஆட்டம் ஆகிய 11 கலை வடிவங்களையும் அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு சேர்க்க சிறப்புத் திட்டம் இந்த வருடம்*

தீட்டப்பட்டுள்ளது. மேலும், தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஏற்கெனவே உருவாக்கப்பட்டிருந்த கூத்து அரங்கத்திற்கு மீண்டும் உயிர் தரப்பட்டு, வலுப்படுத்தப்பட்டு, நாட்டுப்புறவியல் துறை உருவாக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்துகள் உள்வாங்கப்பட்டு, அதன் மூலமாகவும் கண்டிப்பாகச் செயல் வடிவம் தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அருமை நண்பர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர் பெயர் பாலசுப்பிரமணியம் அல்ல, திரு. பரமசிவம்.*

திரு. துரைமுருகன்: *பரமசிவமா? அவருடைய தந்தையார் பெயர்தான் எனக்கு வருகிறது. அருமை நண்பர் திரு. பரமசிவம் அவர்களின் தந்தையார் எனக்கு மிகவும் வேண்டியவர். எனக்கு அவருடைய பெயர்தான் வருகிறது. திரு. பரமசிவம் அவர்கள் ஓர் அற்புதமான கேள்வியைக் கேட்டார்; நியாயமான கேள்வி அது. நாடகங்கள் பார்ப்பது குறைந்து போய்விட்டது. விடிய, விடிய பார்க்கலாம். இன்னொரு நாடகம் நடக்கலாம். ஆனால், தற்போது என்ன ஆகிவிட்டது என்றால், நாடகங்களில் சங்கரதாஸ் சுவாமிகளின் பாடல்களையோ அல்லது அருணாச்சல கவிராயரின் பாடல்களையோ அல்லது நந்தனார் கீர்த்தனைகளையோ பாடுவதில்லை. நாடக நடிகர் ராமர் வேஷம் கட்டிக்கொண்டு வந்து, இன்றைய பாடல்கள் மாதிரி பாடிக் கொண்டிருக்கின்றார். நாடகத்தில், கிருஷ்ணன் சென்று சத்தியபாமாவை கதவைத் திற என்று சொல்லும்போது, "சத்தியபாமா கதவைத் திறப்பாயடி" என்று கிட்டப்பா காலத்தில் பாடிய பாடலைப் பாடினால் பார்ப்பார்கள். இவன், அங்கே போய் நின்று கொண்டு, "சத்தியபாமா கதவைத் திற; சத்தியபாமா கதவைத் திற" என்று மெதுவாகக் கூறினால் எப்படி இருக்கும்? அது வேறு மாதிரி அர்த்தம் கொடுக்கும். மெதுவாகக் கூறினால் வேறு மாதிரி அர்த்தம் கொடுக்கும். ஆகையினால், அற்புதமான சங்கரதாஸ் சுவாமிகளின் பாடல்களை அல்லது நந்தனாரின் கீர்த்தனைகளை*

2018 ஜூன் 27]

அல்லது அருணாச்சல கவிராயரின் பாடல்களைப் பாடி நாடகம் நடத்துகிறவர்களுக்கு இந்த அரசாங்கம் தனியாக சிறப்பு உதவி செய்ய வேண்டும். அருணாச்சல கவிராயருடைய பாடல்கள் ஒவ்வொன்றும் மிக அற்புதமானவை. நீங்கள் படித்திருக்கிறீர்கள் அல்லவா!

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, நான் படிக்கவில்லை. (சிரிப்பு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், நாடகங்கள் குறித்து நன்றாக விவரமாகக் கேட்கிறீர்கள், உங்களுடைய சிறு வயதில் இதுபோன்ற நாடகங்களில் நடித்திருப்பீர்கள் போலும்! அதனால், பாடல்களையெல்லாம் நன்றாகப் பாடுகிறீர்கள். அந்தளவுக்கு எனக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை.*

திரு. துரைமுருகன்: *அந்தக் காலத்தில் எங்களுடைய கிராமத்தில் கோவலன் சரித்திரம், அல்லி-அர்ஜுனா போன்ற நாடகங்கள் நடைபெறும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னதுபோன்று, நானும் நிறைய நாடகங்களில் நடித்திருக்கிறேன், இல்லையென்று சொல்லவில்லை. நாடகங்களில் எல்லோரும்தானே நடிக்கிறோம்! இப்போது எல்லோரும் நடித்துக்கொண்டுதானே இருக்கிறோம். ஒருவராவது உருப்படியாகவா இருக்கிறோம்? (சிரிப்பு) எல்லோரும் நடித்துக்கொண்டிருக்கிறோம். (சிரிப்பு) ஆகவே, நாடகமே உலகம். ஷேக்ஸ்பியர் சொன்னதுபோன்று, உலகமே ஒரு நாடக மேடை. நீங்களும்தான் நடிக்கிறீர்கள்! (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் காலத்தில் நடைபெற்ற அரிச்சந்திரா நாடகத்தில் தடி மட்டும் நடக்கும் சார். இங்கே போட்டுக் காண்பித்தாரே! உடையப்பா, தடியை மட்டும் எடுப்பார் பாருங்கள், அற்புதமாக இருக்கும்; அதெல்லாம் போய்விட்டது. கண்ணையா பாகவதர் கம்பெனி, குப்புசாமி நாயுடு கம்பெனி போன்ற நாடகக் கம்பெனிகளெல்லாம் போய்விட்டன. இந்த நாடகக் கலையை உயிர்ப்பிப்பதற்காக அரசு தனி நிதி ஒதுக்க வேண்டும். இதற்கு நல்ல மந்திரி போட்டிருக்கிறீர்கள். (சிரிப்பு) அவர் என்னமோ கிடைக்கும் என்று வந்தார்; இது கிடைத்தது, நல்லதுதான். (சிரிப்பு) ஆகையினால், நாடகக் கலையை அற்புதமாக்க அரசாங்கம் தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

அதேபோன்று, எங்கள் ஊரில் வந்தவாசி பக்கத்திலுள்ள குலசையில் தெருக்கூத்து நடைபெறும். அதில் மிக அற்புதமான பாடல்களெல்லாம் இடம்பெறும். அதில் "அடுக்குமல்லி தொடுத்திருக்கும் பஞ்சணையிலே, சிங்காரக் கேணி ஆடி வரும்

வாடும் பஞ்சணையிலே" என்ற பாடல் இடம்பெறும். என்னே, வார்த்தை பாருங்கள்! இது தெருக்கூத்து பாட்டு. ஆகையினால், இதற்கென தனியாக ஒரு debate-ஐ வைப்போம்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒரு நாளைக்கு வைத்துவிடலாம்.*

திரு. துரைமுருகன்: *நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவரைப் பார்த்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், 'நீங்கள் சிறு வயதில் நாடகங்களில் நடித்திருக்கிறீர்களா?' என்ற கேள்வியைக் கேட்டீர்கள். இதே கேள்வியை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001-2006-ல் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்தபோது மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களைப் பார்த்து, 'நவரசங்களிலும் நீங்கள் மிகவும் அருமையாக நடிக்கிறீர்கள் சபையிலே; ஆகவே, நீங்கள் நடிப்புத் துறைக்குப் போயிருந்தால் மிகப் பெரிய உலக நடிகராக வருவதற்குரிய வாய்ப்புக் கிடைத்திருக்கும் (சிரிப்பு) என்று கூறியது என் நினைவுக்கு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *அதாவது முன்பு இலவச மின்சாரத்தை இரத்து செய்வதுமாதிரி ஒரு சூழ்நிலை வந்தது. அன்றைக்கே நான் பேசினேன். எங்கள் ஆட்சியில் இலவச மின்சாரத்திற்கு கையெழுத்து போட்டிருந்தோம். அதற்கான சட்டமுன்வடிவை தயாரித்து வா என்றார் தலைவர். என்னுடைய* Secretary *திரு. முருகவேல் என்பவர்தான் அந்தக் கோப்பினைக் கொண்டு வந்து வைத்தார். என் கண்ணிலிருந்து பள பள என்று கண்ணீர் வந்தது. அந்த கோப்பெல்லாம் நனைந்திருக்கும் பாருங்கள். (சிரிப்பு) ஏனென்றால், ஒரு சாதாரண குடியானவனுடைய மகன் நான். நான் எல்லா வேலைகளும் செய்தவன். ஒரு குடியானவனின் மகனாக இருந்து, அந்தக் கட்டணத்தை இரண்டு மாதங்களுக்கு*

2018 ஜூன் 27]

ஒரு முறை கட்டும்போது, ஒரு விவசாயி என்ன பாடுபடுவான் என்று எனக்குத் தெரியும். ஆக, எல்லா குடியானவர்களுக்கும் பயன்படும் வகையில் கோப்பில் கையெழுத்திடுகிறோமே என்ற பெருமையுடன் ஆனந்தக் கண்ணீரோடு அன்றைக்கு கையெழுத்துப் போட்டேன். அதை இரத்து செய்கிறீர்களே என்றபோது எனக்கு ஆத்திரம் வந்தது. பேசி முடித்துவிட்டுச் சொன்னேன். "இந்தி எதிர்ப்பின்போது காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த யசோதா ரெட்டி ராஜ்ய சபாவில் பேசியது குறித்து அண்ணா ஒரு முறை சொன்னார்." அதுபோன்று, அன்றைக்கு "முதலமைச்சர் அவர்களே, என் கோரிக்கையை நீங்கள் ஏற்கிறீர்களோ இல்லையோ, இதோ அரங்கிலே பத்திரிகையாளர்கள் இருக்கிறார்கள்; ஆன்றோர், சான்றோர் மேலே இருக்கிறார்கள்" என்று சுற்றி கட கடவென்று கண்ணகி பேசுவது மாதிரி பேசிவிட்டு, நான் வேகத்திலே அப்படியே உட்கார்ந்தேன். அன்றைக்கு அம்மா அவர்கள் அப்படியே பார்த்தார்கள். "Duraimurugan, fortunately or unfortunately you have not entered our field. If you would have been there, there is no Sivaji Ganesan" என்று சொன்னார்கள். (சிரிப்பு) அப்போது நான் சொன்னேன், 'அப்போது நமக்கு ஒரு chance கிடைத்திருக்கும் உங்களை மாதிரி' என்றேன். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: குறிப்பாக திரைத் துறை வருகையால் ஓரளவுக்கு அழிந்துவரக்கூடிய நாடகக் கலையை உயிர்ப்பிப்பதற்காக கூத்துப்பட்டறை போன்ற பயிற்சி அமைப்புகளுக்கு அரசாங்கம் ஆதரவு தந்து கொண்டிருக்கின்றது. இயல், இசை, நாடக மன்றம் மூலமாகப் புது themes உடன், current themes உடன் எந்த நாடகம் உருவானாலும் அது dance சார்ந்த நாடகமாக இருந்தாலும் சரி, இயல் சார்ந்த நாடகமாக இருந்தாலும் சரி, அதற்கு ஒரு இலட்சம் ரூபாய் வரைக்கும் இயல், இசை, நாடக மன்றம் மூலமாக உதவித் தொகை வழங்கப்படுகிறது. இன்னும் அவர்களைத் தேடிப் பிடித்து அந்தக் கலைப் பொக்கிஷங்களை ஆவணப்படுத்தி, அவர்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் தருவதற்கு இயல், இசை, நாடக மன்றம் மூலமாக, கலை பண்பாட்டுத் துறை மூலமாக புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு எல்லாவிதமான உத்வேகமும் தந்து கொண்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

அதிகாரிகளுடன் கூட்டங்களை ஏற்பாடு செய்யுமாறு தமிழக ஆளுநர் மாளிகை செய்தி வெளியிட்டுள்ளதாக ஆங்கிலப் பத்திரிகையில் வந்துள்ள செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் ஆளுநர் மாளிகையிலிருந்து ஒரு செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. அது குறித்து பத்திரிகைகளிலும் விரிவாக வந்திருக்கின்றன. நான் விரிவாக அதை எடுத்துச் சொல்லி நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை. சுருக்கமாகச் சொல்கிறேன். இன்றைக்கு ஆங்கில இந்து பத்திரிகையில்கூட ஒரு தலைப்புச் செய்தியாக வெளியிட்டிருக்கிறார்கள்;'Raj Bhavan comes out with a legal opinion on powers'என்ற தலைப்பிலே பல செய்திகள் வந்திருக்கின்றன. அதிலே குறிப்பாக, 'Pointing out that there was no illegality in "mere meeting with the district officers," which took place after the Governor had requested Chief Secretary Girija Vaidyanathan and Commissioner of Revenue Administration K. Satyagopal to arrange such a meeting' என்று அந்தச் செய்தியை வெளியிட்டிருக்கிறது. ஆக, மாவட்டங்களில் அதிகாரிகளுடனான கூட்டங்களை ஏற்பாடு செய்யுமாறு தலைமைச் செயலாளரையும், வருவாய் நிருவாக ஆணையரையும் கேட்டுக்கொண்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. மாநில ஆளுநரின் ஆய்வு குறித்து இதுவரை அரசின் சார்பில் அளிக்கப்பட்டிருக்கக்கூடிய விளக்கங்களிலோ அல்லது முதலமைச்சருடைய விளக்கத்திலோ ஆளுநர் அவர்கள் அரசிடம் அனுமதி கேட்டுத்தான் இந்தக் கூட்டங்களை நடத்துகிறார் என்ற செய்திகள் இதுவரை வெளிவரவில்லை. ஆனால், ஆளுநர் தலைமைச் செயலாளரிடமே நேரில் கூட்டத்தை ஏற்பாடு செய்யுமாறு அனுமதி கேட்டிருக்கிறார் என்பதை மாநில